(ஆ) சங்கீதம் சம்பந்தமாக றோயல் கல்லூரி/ ட்ரின்டி கல்லூரியில் 5 ஆம் தர தகைமை அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருத்தல்.

(இ) வாத்தியக்குழு பயிற்றுவிக்கும் திறன், குழுவாக இசைக்கக்கூடிய சங்கீத வரைபடங்களை அமைக்கும் திறன் என்பன மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஈ) கீழைத்தேய, மேலைத்தேய சங்கீதம் உருவாக்கும் திறமையும் கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியக் கருவிகளை சுருதி அமைக்கும் , இசைக்கும் திறமை விசேட தகைமையாகக் கருதப்படும்.

(ii) *நடனக்கலைக்குழு (பைலட் ஒசிபர்) :*

(அ) குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலம், சங்கீதம் உட்பட 04 திறமைச் சித்திகள் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்

(ஆ) இலங்கை கலைக்கல்விக் கூடம் (நடனம்) ஒன்றில் பெற்ற கலைப்பட்டம் அல்லது தேசிய மட்டத்தில் நடனமும் சங்கீதமும் இறுதிப்பரீட்சையில் (நடனம்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய, விதேசிய நடனப்பாணிகளை பயிற்றுவிக்கும் திறன் தகைமையாக கருதப்படும்.

(ஈ) கீழைத்தேய, மேலைத்தேய நடனங்களை பயிற்சியளித்து நெறிப்படுத்தும் திறன் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(iii) **கீழத்தேய வாத்தியக்குழு/ மேலைத்தேய இசைக்குழு (பைலட் ஒபிசர்)**

(அ) குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆங்கிலம், சங்கீதம் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்

(ஆ) இலங்கை கலைக்கல்விக் கூடம் (சங்கீதம்) ஒன்றில் பெற்ற கலைப்பட்டம் அல்லது தேசிய மட்டத்தில் நடனமும் சங்கீதமும் இறுதிப்பரீட்சையில் (சங்கீதம்) சித்திபெற்றிருத்தல் வேண்டும். அல்லது இந்தியாவில் "பாத்கண்ட" சங்கீத கல்லூரியில் "விஷாரத" 2 ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

(இ) கீழைத்தேய, மேலைத்தேய இசைக்குழுக்களை பயிற்சியளித்து நெறிப்படுத்தும் திறன் மேலதிக தகைமையாக கருதப்படும் ;

(ஈ) கீழைத்தேய, மேலைத்தேய சங்கீதம் உருவாக்கும் திறமையும் கீழைத்தேய, மேலைத்தேய வாத்திய கருவிகளை சுருதி அமைக்கும், இசைக்கும் திறமை விசேட தகைமையாகக் கருதப்படும் ;

(இ) **விமானத் தள நிர்மாணப் பிரிவு :**

சிவில் பொறியியல் அதிகாரி (ப்லயிட் லெப்டினன்ட்/பிளயிங் ஒபிசர் /ஒபிசர்)
சிவில் பொறியியல் BSc பட்டசான்றிதழ் அல்லது தொழில் நுட்ப டிப்ளோமா (NDT) பட்டச்சான்றிதழ் இருத்தல் வேண்டும். வரைபு அளவையில் பெற்ற அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) **மருத்துவப் பகுதி**.- *மருத்துவ அதிகாரி*.- (ப்லைட் லெப்டினன்ட்) இலங்கை மருத்துவச் சபையில் (SLMC) முழுமையாக பதிவாயிருத்தல் வேண்டும்.

(உ) **பல் மருத்துவப் பகுதி**.- *பல் மருத்துவ அதிகாரி*.- (ப்லையிட் லெப்டினன்ட்) : பல் மருத்துவப் பட்டம் BDS அல்லது அதற்குச் சமமான ஏதேனுமொரு சான்றிதழ் இருத்தல் வேண்டும் ; அத்துடன் இலங்கை மருத்துவச் சபையில் பதிவாகியிருத்தல் வேண்டும்.

(ஊ) **நிருவாக மருத்துவப் பிரிவு :** மனோ தத்துவ வைத்திய அதிகாரி (ப்லையிட் லெப்டினனட்)
மனோ வைத்திய துறையில் BSc பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(எ) **நிருவாக வேளாண்மை பிரிவு :** வேளாண்மை அதிகாரி (ப்ளயிங் ஒபிசர்)
வேளாண்மையில் BSc பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஏ) **நிருவாக கல்விப் பிரிவு :** ஆங்கில மொழி உபதேசகர் (ப்லயிட் லெப்டினன்ட்/பிளயிங் ஒபிசர்/பைலட் ஒபிசர்)

ஆங்கிலத்தில் B.A./ B.Sc அல்லது டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக M.A./M.Sc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் M.A./M. Sc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது

க.பொ. த. (உ.த,) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்க ஆசிரியர் பயிற்சி பாடசாலையில் ஆங்கில மொழி ஆசிரியராக இரண்டு வருட கால பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆசிரியர் பயிற்சிக்கு பிறகு ஆங்கில மொழி ஆசிரியராக மூன்று வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது

ஆங்கிலம் ஒரு பாடமாக B.A./B.Sc பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலத்தில் B.Ed அல்லது ஆங்கில மொழி மூலம் B.A./ B. Sc பட்டம் பெற்றிருத்தலுடன் ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது

க.பொ. த. (உ.த,) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தேசிய கல்விக்கூடத்தில் ஆங்கில மொழி ஆசிரியராக மூன்று வருட கால பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆசிரியர் பயிற்சிக்கு பிறகு ஆங்கில மொழி ஆசிரியராக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

3. ***வேறு தகைமைகள் :***

(அ) *தேசிய இனம்*.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(xi) மக்கள் தொடர்பும் தொடர்பாடலும்
(xii) தொழிற் சங்கங்களும் அரசியல் உரிமைகளும்
(xiii) கொடுப்பனவு முறைகள் (செயற்பாடுகள்)
(xiv) நிதி அதிகார ஒப்படைப்பு
(xv) டென்டர் (கேள்விப்பத்திரம்) செயற்பாடுகள்
(xvi) கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்
(xvii) பொருட் பட்டோலைப் பராமரிப்பு (INVENTRY)
(xviii) கையிருப்பெடுப்பு ஆய்வு நடவடிக்கைகள்
(xix) வங்கிக் கணக்கைப் பராமரித்தல்
(xx) கணக்காய்வுச் செயற்பாடுகள்
(xxi) நட்டங்கள், இழப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
(xxii) பொது மக்களின் நிதியினைப் பராமரித்தல்
(xxiii) அரச உடைமைகளைப் பாதுகாத்தல்
(xxiv) ஒப்பந்த நடவடிக்கைகள்
(xxv) ஊழியர் சேமலாப நிதியம்
(xxvi) ஊழியர் நம்பிக்கை நிதியம்

(ஆ) சமுர்த்தி இயக்கம் தொடர்பான விடய அறிவு.- இவ்வினாத்தாள்கள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். முதலாம் பகுதிக்கு கட்டாயம் விடையளிக்கப்படல் வேண்டுமென்பதுடன், இப்பகுதியானது பல்லின வினாக்கள் சிறு வினாக்களைக் கொண்டதாகும். இதற்கான புள்ளிகள் 60 ஆகும். இரண்டாவது பகுதி விடய அறிவுடன் தொடர்புபட்ட கட்டுரை வடிவிலான வினாக்களாக அமைவதுடன் விடய அறிவாய்வு (case study) வினாவையும் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் இலகுவாகத் தெரிவுசெய்வதற்கு ஏற்றவரையிலான பல வினாக்கள் இப்பகுதிக்குள் இருப்பதுடன் அவ்வினாக்களில் இரண்டிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். இப்பகுதிக்கென வழங்கப்படும் புள்ளிகள் 40 ஆகும்.

வினாத்தாள்களுக்கு விடையளிக்க வழங்கப்படும் காலம் இரண்டு மணித்தியாலங்களாகும்.

(1) வறுமை ஒழிப்பு
(2) சமுர்த்தி இயக்கத்தின் புதிய எண்ணக்கருக்கள்
  * நோக்கு
  * பணி
  * குறிக்கோள்கள்
  * வறுமையினை ஒழிக்கும் பல்வேறு மட்டத்திலான திட்டமிடல்கள்
  * குடும்ப அபிவிருத்தித் திட்டமிடல்
  * செயற்திறன் மதிப்பீடு
  * அரசியல் கலப்பீட்டினை நீக்குதல்
(3) சமுர்த்தி இயக்கத்தின் கீழ் மக்கள் அமைப்புக்களை அணி திரட்டுதல்
  * சமுர்த்தி செயலணி
  * சிறு குழுக்கள்
  * சமுர்த்திச் சங்கம்
  * சமுர்த்தி வங்கிச் சங்கம்
  * சமுர்த்தி மகா சங்கம்
(4) சமூக வலுவூட்டல் செயற்பாடுகள்
(5) பங்கேற்பு அபிவிருத்தி மக்கள் கருத்திட்டங்களும், கிராம அபிவிருத்தியும்
(6) வங்கி நிதி நடவடிக்கைகள்
(7) பல்வேறு கடன் நிகழ்ச்சித்திட்டங்கள்
(8) சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
(9) சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

6. எவராவதொரு பரீட்சார்த்திக்குப் பரீட்சை நடாத்துவதற்கு முன்பாக குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன் அனுமதி அட்டை கிடைக்கத்தவறின், பின்வரும் விபரங்களை 'பலவத்தை, பத்தரமுல்லை, பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும். தந்தி மூலம் அனுப்பப்படும் முகவரி : பரீட்சை, பத்தரமுல்லை' ஆகும் :

(1) பரீட்சையின் பெயர் ;
(2) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(3) விண்ணப்பதாரியின் முகவரி ;
(4) விண்ணப்பப்படிவத்தினைத் தபாலிலிட்ட அலுவலகம் ;
(5) பதிவு இலக்கமும் திகதியும்.

7. **அடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினைச் சமர்ப்பிக்கலாம் :-

(1) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **பரீட்சைக் கட்டணங்கள்.**- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தியிடமிருந்து கீழ் குறிப்பிடப்படும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படும் :-

| பரீட்சைக் கட்டணம் | ரூபா சதம் |
|---|---|
| (அ) முதலாம் முறைக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது | |
| (ஆ) முதலாம் முறையின் பின்னர் முழுப்பரீட்சைக்கும் | 250.00 |
| (இ) ஒரு விடயத்திற்கு | 125.00 |

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 ஆம் இலக்கத்தினையுடைய வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படுகின்றவாறு நாட்டின் எந்தவொரு மாவட்ட/பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைக் கழறாதவாறு விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்பப்படல் வேண்டும்.

9. இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக பரீட்சார்த்தி ஒருவர் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும்.

10. இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ள, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள, உங்களது திணைக்களம்/அலுவலக உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதன் பொருட்டு திணைக்கள அலுவலகத் தலைவரினால் கடமைலீவு வழங்கப்படல் வேண்டும்.

11. இச்சட்டதிட்டங்களுக்குட்படாத வேறு காரணங்களும் இருக்குமாயின் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படும்.

ரவீந்திர ஹேவாவிதாரன,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகார சபை,
4 ஆவது மாடி,
செத்சிரிபாய,
பத்தரமுல்லை.

## அட்டவணை I

### மாவட்டத்தின் பெயர்களும் இலக்கமும்

| மாவட்டம் | இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கம்பஹா | 2 |
| களத்துறை | 3 |
| மாத்தளை | 4 |
| கண்டி | 5 |
| நுவரெலியா | 6 |
| காலி | 7 |
| மாத்தறை | 8 |
| அம்பாந்தோட்டை | 9 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பொலநறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொணராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சைச் சுட்டெண் [ ]

**I ஆம் II ஆம் தரத்தினையுடைய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான திறன்தகைமைகாண் தடைதாண்டல் பரீட்சை - 2006**

உரிய தரம்

| | |
|---|---|
| I | |
| II | |

உரிய கூட்டினுள் "✓"என்ற அடையாளத்தை இடவும்.

(அலுவலக உபயோகத்திற்கு)

| நகரம் | நகர எண் |
|---|---|
| | |
| | |

(வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைய விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றவுள்ள நகரத்தினையும் நகர இலக்கத்தினையும் குறிப்பிடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :- [ ]
(சிங்களம் - 2 தமிழ் - 3) (உரிய இலக்கங்களை நிரலில் இடவும்.)

1.0 பெயர் :-

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):-----.
உதாரணமாக.- SILVA. A. A.

1.2 முதலெழுத்துக்களுக்கான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.0 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

2.1 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்):-----.

3.0 3.1 பால் :
(பெண் - 1, ஆண் - 2) [ ]
(உரிய இலக்கத்தினைக் கூட்டிலிடுக)

3.2 விவாகமானவர்/விவாகமாகாதவர் என்பது பற்றி :- [ ]
(விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2)
(உரிய இலக்கத்தை எழுதுக)

3.3 பிறந்த திகதி :-
ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

4.0 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற விடயங்கள்:
தாபனங்கள் மற்றும் கணக்கீட்டுச் செயற்பாடுகள் - 1
சமுர்த்தி விடயம் தொடர்பான விடய அறிவு - 2 [ ]
இரண்டு விடயங்களும் - 3

5.0 பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவையல்லாவிடின் செலுத்திய பரீட்சைக் கட்டணம் ரூபா .......... முழுப் பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். தனித்தனி விடயங்களுக்காயின் ரூபா 125 ஆகும்.

[ பற்றுச்சீட்டினை ஒட்டவும் ]

6.0 தற்போது வகிக்கும் பதவியும் தரமும் : -----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பிழையற்றவை எனவும் விண்ணப்பிக்கப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்று வதற்கு தகைமையுடையவர் என்பதையும் இத்தால் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

...........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

.................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்.

திகதி : -----.

4-286

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.